07 FEB 1996

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கை உயர்தரத் தொழினுட்பக் கல்வி நிறுவகச் சட்டம்

---

*(1995, டிசெம்பர் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது***

---

*1995, டிசெம்பர் மாதம் 01 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்*
***வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது***

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது***

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

***விலை : ரூபா 1.65*** ***தபாற் செலவு : ரூபா 2.54***

## 1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கை உயர்தரத் தொழினுட்பக் கல்வி நிறுவகச் சட்டம்

[1995, டிசெம்பர் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 52/95

இலங்கை உயர்தரத் தொழினுட்பக் கல்வி நிறுவகத்தைத் தாபிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கை உயர்தரத் தொழினுட்பக் கல்வி நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

### பாகம் 1

### இலங்கை உயர்தரத் தொழினுட்பக் கல்வி நிறுவகத்தைத் தாபித்தல்

2. (1) இலங்கை உயர்தரத் தொழினுட்பக் கல்வி நிறுவகம் என அழைக்கப்படவேண்டிய (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) நிறுவகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இலங்கை உயர்தரத் தொழினுட்பக் கல்வி நிறுவகத்தைத் தாபித்தல்.

(2) நிறுவகமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக் கொண்டு இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பெயர்கொண்டு அது வழக்குத் தொடரலாம், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

3. நிறுவகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும் :— நிறுவகத்தின் குறிக்கோள்கள்.

(அ) உயர் தேசிய டிப்புளோமா, மற்றும் தேசிய டிப்புளோமா நெறிகள் அத்துடன் காலத்துக்குக் காலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறெவையேனும் தொழினுட்ப நெறிகள் என்பவற்றை நடாத்துதல்;

(ஆ) தொழினுட்பக் கல்வியைத் திட்டமிடுதலும் ஒருங்கிணைத்தலும்;

(இ) பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகளை உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களுக்குப் பங்கீடு செய்தலும் அத்தகைய ஒவ்வோர் உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்தினாலும் செலவினம் கட்டுப்படுத்தப்படுதலும்;

(ஈ) உயர்தர தொழினுட்ப நிறுவகங்களில் கல்விசார், பயிற்சித் தரங்களைப் பேணுதல்;

(உ) உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களின் நிருவாகத்தை ஒழுங்கு படுத்துதல்;

(ஊ) ஒவ்வோர் உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்துக்கும் மாணவர்களைச் சேர்த்தலை ஒழுங்குபடுத்துதல்; அத்துடன்

(எ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்டவாறான அல்லது அதன்மீது சுமத்தப்பட்டவாறான அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்டவாறான அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும்.

நிறுவகத்தின் தத்துவங்கள்.

4. நிறுவகமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்கள் தாபிக்கப்படுதலை அமைச்சருக்கு விதந்துரைத்தல்;

(ஆ) உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களுக்கு ஏற்புடையனவான நியதிச்சட்டங்களையும் துணைவிதிகளையும் வகுத்தமைத்தல்;

(இ) உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களினால் கற்கைநெறிகள் நடாத்தப்படுவதற்கு அவசியமான நிதிசார், பௌதீக மற்றும் மனித மூலவளங்களைத் தீர்மானித்தல்;

(ஈ) உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களுக்கு நிதிகளைக் குறித்தொதுக்குதலும், செலவினத்தை ஒழுங்குபடுத்தலும், அந் நிறுவகங்களின் நிதிப்பயன்பாட்டைக் கண்காணித்தலும்;

(உ) தேசியக் கொள்கைக்கிசைந்தொழுக ஒவ்வோர் உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்திற்கும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான மாணவர்களைத் தெரிவுசெய்தல்;

(ஊ) ஒவ்வோர் உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்தினதும் நிதித் தேவைகளைக் காலத்துக்குக் காலம் விசாரணை செய்தலும் அல்லது நுண்ணாய்வு செய்தலும்;

(எ) ஒவ்வோர் உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்தினதும் ஆளும் அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன், அதன் பேணுகைக்கும் அபிவிருத்திக்கும் அல்லது வேறேதேனும் பொதுவான அல்லது விசேடமான நோக்கத்துக்காக மூன்றாண்டுக்கொரு முறையான வரவுசெலவுத் திட்டங்களைக் காலத்துக்குக் காலம் தயாரித்தல்;

(ஏ) ஒவ்வோர் உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்துக்கும் அளிப்பது விரும்பத்தக்கதாகவுள்ள அல்லது அவசியமாகவுள்ள பொது நிதிகளிலிருந்தான மானியக்கொடைகளின் தன்மையும் தொகையும் பற்றி அமைச்சருக்குக் காலத்துக்குக்காலம் விதப்புரைகளைச் செய்தல்;

(ஐ) உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களின் பணியாட்டொகுதியின ருக்கான ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் நியமன நடவடிக்கை முறைகளையும் வகுத்தமைத்தல்;

(ஒ) பணியாட்டொகுதி அபிவிருத்திக்கான திட்டங்களை வகுத் தமைத்தல்;

(ஓ) உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களின் வெவ்வேறு தராதரத் தினரான பணியாட்டொகுதியினருக்குச் செலுத்தப்படவேண் டிய வேதிய அளவையும், பணியாட்டொகுதியினர் பெறவேண் டிய ஏனைய நன்மைகளின் தன்மையையும் அளவையும், அர சாங்கத்தின் முழுமொத்த வேதன மற்றும் சம்பளக் கொள்கை களினுள் காலத்துக்குக்காலம் தீர்மானித்தல்;

(ஔ) நிறுவகமானது அதன் தொழிலைத் தகுந்த முறையிலும் திற மையாகவும் நடாத்துவதற்கு அவசியமெனக் கருதக்கூடியவ் வாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் கொண்டிருக்க வேண்டிய நிறுவகத்தின் பணியாட்டொகுதி யினரை நியமித்தல்;

(க) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரின் நன்மைக்காக சேம நலத் திட்டங்களைத் தாபித்தலும் தொழிற்படுத்தலும்;

(ங) ஏதேனும் உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்தின் பிரதான நிறை வேற்று அலுவலரால் அந்த நிறுவகத்தின் ஆளும் பேரவையின் கவனத்துக்குக் கொண்டுவரப்படக்கூடியவாறான அந்த உயர் தரத் தொழினுட்ப நிறுவகத்தின் மாணவர்களின் சேமநலம் பற்றிய அத்தகைய கருமங்களை நுண்ணாய்வு செய்தலும் அல் லது நுண்ணாய்வு செய்வித்தலும் பரிகார வழிமுறைகளை எடுத்தலும்;

(ச) உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் முடிபுகளுடன் பாதிக்கப்பட்ட திறத்தவர்கள் திருப்தியுறாத அத்தகைய கருமங்களில் பணியாட்டொகுதியின [illegible] மாணவர்களுக்குமான [illegible] முறையீட்டுக் குழுவாகச் செயலாற்றுதல்;

(ஞ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை கொள்வனவு செய்தல், வைத்திருத்தல், அதனை விற்பனை செய்தல் குத்தகைக்கு விடல், ஈடுவைத்தல், கொடுத்து மாற்றுதல் அல் லது [illegible] கையளித்தல் என்பனவும்;

[illegible] அசைவற்ற ஆதன மெதுவும் அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி விற் [illegible]

(ட) நடைமுறைக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகள், வைப்புக் கணக்கு கள் என்பவற்றை ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் திறந்து [illegible]

(ண) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிடமிருந்து மானியக்கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளல்;

(த) அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அல்லது அதன்கடமைகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளுதலும் புரிதலும்;

(ந) தொழிநுட்ப ஆளணியினர் மற்றும் இணைந்த உயர்தொழில் புரிபுநர்கள் என்போரின் கல்வி அபிவிருத்தியின் ஏதேனும் அம்சம் தொடர்பாக ஆராய்ச்சியையும், ஆய்வுகளையும், நன்னாய்வுகளையும் தொடக்குதல், மேம்படுத்துதல், நடாத்துதல், அத்துடன் மானியக் கொடைகளை வழங்குதல்;

(ப) தொழினுட்ப ஆளணியினர் மற்றும் இணைந்த உயர்தொழில்புரிபுநர் என்போரின் கல்வி தொடர்பான குறித்த ஆராய்ச்சிக் கருத்திட்டத்திற்காக அல்லது கருத்திட்டங்களுக்காக எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு, அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவகத்துக்கு அல்லது நிறுவகங்களுக்கு மானியக் கொடைகளை வழங்குதல்;

(ம) நிறுவகத்தின் அலுவல்களின் முகாமை தொடர்பில் விதிகளை ஆக்குதல்; அத்துடன்

(ய) நிறுவகத்தின் அபிப்பிராயப்படி அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவையான அல்லது உசிதமானவையான அல்லது அதன் இடைநேர்விளைவானவையான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தல்.

நிறுவகத்தின் கல்வித்துறைத் தத்துவங்கள்.

5. நிறுவகமானது, 4ஆம் பிரிவினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, பின்வரும் கல்வித்துறைத் தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் :—

(அ) உயர்தரத் தொழினுட்பக் கல்விமீதான கொள்கையை அமைச்சருக்கு விதந்துரைத்தல்;

(ஆ) இயைபான கற்கைநெறிகளின் பாடவிதானங்களைத் திட்டமிடுதலும், பரிசீலனை செய்தலும், மீளாய்தலும்;

(இ) உயர்தரத் தொழினுட்பக் கல்வி அபிவிருத்தியின் ஏதேனும் அம்சம் தொடர்பாக ஆராய்ச்சி, ஆய்வுகள் மற்றும் நன்னாய்வுகள் என்பவற்றைத் தொடக்குதலும், மேம்படுத்துதலும், நடாத்துதலும், ஒருங்கிணைத்தலும்;

(ஈ) மாணவர் செயற்றிறனை அளவிடுதல் ;

(உ) பரீட்சைகளை நடாத்தி மாணவர் செயற்றிறனை மதிப்பீடு செய்தல்;

(ஊ) அந்நோக்கங்களுக்காக இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்கத் தொழில் டிப்புளோமாக்களையும் வேறு கல்வித்துறைச் சிறப்புகளையும் அளித்தல்; அத்துடன்

(எ) ஒவ்வோர் உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்தினதும் ஆளும் அதிகார சபையின் கலந்தாலோசனையுடன், ஒவ்வோர் உயர்தர தொழினுட்ப நிறுவகத்துக்கும் ஆண்டுதோறும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கையைக் காலத்துக்குக்காலம் தீர்மானித்தலும் அந்த எண்ணிக்கையைப் பல்வேறு கற்கை நெறிகளுக்குப் பங்கீடு செய்தலும்.

**நிறுவகத்தின் நிருவாகம் ஆளும் பேரவைக்கு உரித்தாக்கப் பட்டிருத்தல்.**

6. (1) நிறுவக அலுவல்களின் நிருவாகமும், முகாமையும், கட்டுப்பாடும் (இதனைத்துப் பின்னர் "பேரவை" எனக்குறிப்பிடு செய்யப்படுவதான) நிறுவகத்தின் ஆளும் பேரவைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்திற்காக, இச்சட்டத்தினால் நிறுவகத்திற்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

**பேரவையின் அமைப்பு.**

7. (1) பேரவையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :

(i) உயர்கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; இவர் தவிசாளராக இருத்தல் வேண்டும். (இதனைத்துப் பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பிடு செய்யப்படுவார்);

(ii) நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(iii) தொழினுட்பக் கல்வி மற்றும் வாண்மைத்தொழிற் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி; அத்துடன்

(ஆ) பின்வரும் ஏனைய உறுப்பினர்கள் :

(i) அமைச்சரால் நியமிக்கப்பட்டவரான, 1959 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் பிரதிநிதியொருவர்;

(ii) அமைச்சரால் நியமிக்கப்பட்டவரான, இலங்கை வர்த்தக, கைத்தொழில் மன்றங்கள் சம்மேளனத்தின் பிரதிநிதியொருவர்;

(iii) அமைச்சரால் நியமிக்கப்பட்டவரான, 1968 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர் நிறுவகத்தின் பிரதிநிதியொருவர்;

(iv) முறையே இளைஞர் அலுவல்கள், தொழில் மற்றும் விளையாட்டுக்கள், கைத்தொழில் அபிவிருத்தி, வியாபாரம், மற்

றும் வர்த்தகம், அறிவியல், தொழினுட்பவியல் மற்றும் மனித மூலவளங்கள், கல்வி, கமத்தொழில், காணி மற்றும் காடுவளர்ப்பு என்ற விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்களின் அமைச்சுக்களிலிருந்து அமைச்சரால் நியமிக்கப்பட்டவரான, ஆறுக்கு மேற்படாத பிரதிநிதிகள்; அத்துடன்

(v) நிறுவகத்திற்கு இயைபான கற்கைத் துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட தேர்ச்சி அல்லது திறமை கொண்டுள்ளவர்களான ஆட்களாகவிருப்பவர்களும் அமைச்சரினால் நியமிக்கப்பட்டவர்களுமான மூன்று ஆட்கள்.

(2) ஆளொருவர், பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது மாகாணசபை உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது உறுப்பினரொருவராக வந்தால், அவர் பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்தும் உறுப்பினரொருவராக இருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்டவரான பேரவை உறுப்பினரொவ்வொருவரும்—

(அ) அமைச்சரால் அவர் பதவியினின்று அகற்றப்பட்டால்; அல்லது

(ஆ) அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பிய கடிதமூலம் அவர் தமது பதவியைத் துறந்தால்,

அத்தகைய உறுப்பினர் பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(4) (அ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினரொருவர் இறக்கின்றவிடத்து அல்லது பதவி துறக்குமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, எந்த உறுப்பினர் இறக்கின்றாரோ அல்லது பதவிதுறக்கின்றாரோ அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்றாரோ அந்த உறுப்பினரின் இடத்தில் உறுப்பினரொருவராக இருக்கவென அமைச்சரானவர் வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(ஆ) இந்த உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்டவரெவரேனும் பேரவை உறுப்பினர் முன்னரே தமது பதவியைத் துறந்தால் அல்லது இறப்பதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, அவர் எவ்வுறுப்பினருக்குப் பின்வந்தாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய [illegible] இருக்கின்றவிடத்து, அமைச்சரானவர் அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

(6) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட போரவை உறுப்பினரொவ்வொருவரும், அவர் இறப்பதன்மூலம், பதவி துறப்பதன் மூலம் அல்லது அகற்றப்படுவதன் மூலம் தமது பதவியை முன்னதாகவே வறிதாக்கினாலொழிய, அத்தகைய பதவிக்கு அவர் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்றாண்டுக்கான காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) போரவையின் பதவிவழி உறுப்பினரொவ்வொருவரும், எந்தப் பதவியின் பயனைக்கொண்டு போரவையின் உறுப்பினரொருவராக வந்துள்ளாரோ அந்தப் பதவியை வகிக்கும் வரையில் அவர் பதவி வகித்தல் வேண்டும்.

8. நிறுவகத்தின் இலச்சினையானது— நிறுவகத்தின் இலச்சினை.

(அ) போரவை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கின்றவாறான அத்தகைய ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) போரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றஞ் செய்யப்படலாம்; அத்துடன்

(இ) போரவையின் அனுமதியுடனும், போரவையின் உறுப்பினரொருவரின் முன்னிலையிலும் அல்லாது ஆவணமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவ்வுறுப்பினர் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அந்த ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

9. (1) நிறுவனத்தின் தவிசாளர், அல்லது அவர் சமுகமாயிராத போது பணிப்பாளர் தலைமையதிபதி போரவையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர், பணிப்பாளர் தலைமையதிபதி ஆகிய இருவரும் சமுகமாயிராதபோது, சமுகமாயிருக்கும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குதல் வேண்டும். போரவையின் கூட்டங்கள்.

(2) போரவையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண், போரவையின் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோராயிருத்தல் வேண்டும்.

(3) போரவையின் கூட்டமெதிலும் முடிவெடுத்தற்கான எல்லா விடயங்களும், சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்குக்கொண்டு முடிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சரிசமமாயிருக்கின்ற விடயத்தில் போரவையின் கூட்டமெதிலும் தலைமைதாங்கும் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர், தமது சொந்த வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, போரவையானது அதன் கூட்டங்கள் தொடர்பாகவும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பாகவும் அதன் சொந்த நடவடிக்கை முறையினை ஒழுங்குபடுத்தலாம்.

(6) பேரவையின் செயல் அல்லது முடிபு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருக்கின்றது என்ற காரணத்தினால் மாத்திரம் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றது என்ற காரணத்தினால் மாத்திரம் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

கல்வித்துறை ஒன்றியம்.

10. (1) (இதனகத்துப்பின்னர் "ஒன்றியம்" எனக் குறிப்பிடு செய்யப்படுவதான) நிறுவகத்தின் கல்வித்துறை ஒன்றியமொன்று இருத்தல் வேண்டும்.

(2) ஒன்றியமானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பதவிவழி உறுப்பினர்கள் ;

(i) தவிசாளராகவிருக்க வேண்டிய நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ii) செயலாளராகவிருக்க வேண்டிய நிறுவகத்தின் திட்டமிடல் ஆராய்ச்சிப் பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி;

(iii) பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி, நிறுவன அலுவல்கள் ;

(iv) உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களின் பணிப்பாளர்கள் ;

அத்துடன்

(ஆ) பின்வரும் ஏனைய உறுப்பினர்கள் ;

(i) பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களிலிருந்து பேரவையினால் நியமிக்கப்படுபவரான ஐந்து பிரிவுத் தலைவர்கள் ;

(ii) உயர்தரத் தொழினுட்ப நிறுவனங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒவ்வொரு கற்கைத் துறையிலிருந்தும் பேரவையினால் நியமிக்கப்படுபவரான ஐந்து ஆசிரியர்கள்; அத்துடன்

(iii) நிறுவகத்துக்கு இசைவாகவுள்ள கற்கைத் துறைகளில் நிறைவாய்ந்த ஆட்களிடையேயிருந்து நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியின் விதப்புரையின் மீது பேரவையினால் நியமிக்கப்படுபவரான ஐந்து ஆட்கள்

(3) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஒன்றியத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரது நியமனத்

திகதியிலிருந்து கணிக்கப்பட்ட இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு உறுப்பினராகப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், மீள நியமிக்கப்படுதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) ஒன்றியத்தின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் ஐந்தாதல் வேண்டும்.

கல்வித்துறை ஒன்றியத்தின் தத்துவங்கள்.

11. (1) நிறுவகத்திலான போதனை, கல்வி, ஆராய்ச்சி மற்றும் பரீட்சைகள் என்பவற்றின் கட்டுப்பாட்டையும் பொதுப் பணிப்பையும் ஒன்றியம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, ஒன்றியமானது, பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் அத்துடன் நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களின் கற்கைப் பகுதிகளிலிருந்தான அறிக்கைகளைக் கவனத்துட் கொண்டபின்னர் கற்கை நெறிகள், பரீட்சைகள் என்பன தொடர்பான நியதிச்சட்டங்களை வரைதலும் அத்தகைய வரைவுகளை அங்கீகாரத்துக்கெனப் பேரவைக்குச் சமர்ப்பித்தலும்;

(ஆ) பரீட்சகர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைப் பேரவைக்கு விதந்துரைத்தல்;

(இ) (i) மீள் ஒழுங்குபடுத்துவதற்கான திட்டங்கள்; அத்துடன்

(ii) அத்தகைய பிரிவுகளுக்குக் கற்கை விடயங்களைக் குறித்தொதுக்குதல்,

என்பன சம்பந்தமாக, உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களின் கற்கைப்பகுதிகளிலிருந்தான அறிக்கைகளைக் கவனத்துட் கொண்ட பின்னர் பேரவைக்கு விதந்துரைத்தல்;

(ஈ) இணையுரிமைப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், கல்விப் பரிசில்கள், பணவுதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பனவற்றை வழங்கும் மாதிரியையும் நிபந்தனைகளையும் பேரவைக்கு விதந்துரைத்தல்;

(உ) பேரவையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின் மீது இணையுரிமைப் பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும், கல்விப் பரிசில்களையும், பணவுதவிகளையும், பதக்கங்களையும், மற்றும் வேறு பரிசில்களையும் வழங்குதல்;

(ஊ) அது தகுதியென எண்ணக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையிலான நிலையியற் குழுக்களை நியமித்தலும், குறிப்பாக ஆனால் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வரும் குழுக்களை நியமித்தலும் :—

(i) தகவற் சேவைகள் குழு ;

(ii) சேர்த்துக்கொள்ளல்கள் குழு ;

(iii) ஆராய்ச்சிக் குழு;

(iv) பாடவிதான மற்றும் அளவிடு செய்தற் குழு; அத்துடன்

(v) லீவு மற்றும் அளிப்புக்கள் குழு.

அத்துடன் அவற்றின் விசாரணைக்குரிய விடயங்களைக் குறித்துரைத்தலும் அவற்றின் அறிக்கைகளைக் கவனத்துட்கொள்ளுதலும் ஒன்றில் அத்தகைய அறிக்கைகளை அங்கீகரித்தலும் அல்லது நிராகரித்தலும்; அத்துடன்

(ஈ) கற்கைநெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான தேவைப்பாடுகளை போவைக்கு விதந்துரைத்தல்.

## பாகம் II

### நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியையும் நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரையும் நியமித்தல்

*நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமித்தல்.*

12. (1) அமைச்சரானவர், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பிடு செய்யப்படுபவரான) பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவரை நியமிக்கலாம். இவர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும், பிரதான கல்வித்துறை அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(2) (1)ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியானவர், இறப்பின்மூலம், பதவி துறப்பதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம், முன்னதாகவே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் திகதியிலிருந்து ஐந்தாண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், போவையின் பொதுப் பணிப்புக்கு அமைவாக, நிறுவகத்தினது அலுவல்களின் நிருவாகத்திற்கும், நிறுவகத்தின் பணியாட்டொகுதியினரின் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்புடையவராதல் வேண்டும். அவர், போவையின் முடிபுகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்குப் பொறுப்புடையவராதலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, நிறுவகத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமானவையென அவரால் கருதப்படுகின்ற கொள்கைகளையும் வழிமுறைகளையும் போவை கவனத்துட் கொள்வதற்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, போவையால் அவருக்குக் கையளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களை அல்லது கடமைகளைப் பிரயோகித்தல் அல்லது புரிதல் வேண்டும்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் சபையின் அல்லது வேறு குழுவின் கூட்டமெதிலும் சமுகமாயிருப்பதற்கும் பேசுவதற்கும் வாக்களிப்பதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(7) அமைச்சர் —

(அ) பணிப்பாளர் தலைமையதிபதி நிரந்தரமாகத் தமது கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராக வந்தால் ; அல்லது

(ஆ) அமைச்சரின் அபிப்பிராயப்படி, மோசடித் தன்மைத்தான அல்லது சட்டவிரோதத் தன்மைத்தான அல்லது நிறுவகத்தின் குறிக்கோள்களுக்கு வெளிப்படையாக எதிரானதாக இருக்கும் செயலொன்றை அல்லது காரியமொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி செய்திருந்தால் ; அல்லது

(இ) தேசிய கொள்கைக்கு முரணாகப் பணிப்பாளர் தலைமையதிபதி செயலாற்றினால்,

அவரை எழுத்துமூலம் பதவியினின்றும் அகற்றலாம்.

(8) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியானது அவர் இறப்பதன்மேல், அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியினின்று அகற்றப்பட்டதன்மேல் அல்லது அந்தப் பதவியைக் கொண்டிருப்பவர் அதன் சார்பில் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பிய கடிதமூலம் பதவி துறப்பதன் மேல், வறிதாதல் வேண்டும்.

(9) பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டவரான எவரேனும் ஆள் (7) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியினின்று அகற்றப்பட்டாலொழிய பணிப்பாளர் தலைமையதிபதியாக மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(10) பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டால், அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமனமொன்றைச் செய்யும்வரை, பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமைகளைப் புரிவதற்கெனப் பேரவையின் உறுப்பினரொருவரை நியமிக்கலாம்.

(11) பணிப்பாளர் தலைமையதிபதி நிறுவகத்தின் கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

(12) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், பேரவையின் அங்கீகாரத்துடன் அவ்வாறு செய்வது அவசியமானதென அவர் கருதும் போதெல்லாம் நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது பணியாட்டொகுதியின் வேறு உறுப்பினருக்கு, பேரவையால் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைக் கையளிக்கலாம்.

13. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அமைச்சரால் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாக, பேரவையானது நிறுவகத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். நிறுவகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனம் ஒவ்வொன்றும், ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம், நியமிப்பதற்கான நடவடிக்கைமுறை என்பவற்றிற்கிணங்க, பேரவையினால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அமைச்சரால் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாக, பேரவையானது வேதனங்கள், சம்பளம், அல்லது வேறு ஊதியம் என்பன உட்பட, நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானித்தல் வேண்டும்.

(4) நிறுவகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் வேலையிலிருந்து நீக்குவதற்கான தத்துவம் உட்பட, பேரவையின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்திருத்தல் வேண்டும். பேரவை, ஒழுக்காற்றுக் கருமங்கள் தொடர்பாக விதிகளை ஆக்கலாம்.

(5) பேரவையானது நிறுவகத்தின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்காக, சகாய நிதியங்களையும் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் ; அத்துடன் ஏதேனும் அத்தகைய நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்கு உதவு தொகைகள் செலுத்தலாம்.

குறித்த சில ஒப்பந்தங்களின் நோக்கங்களுக்காக நிறுவகத்துக்குச் செய்யப்பட்ட சேவை அரசாங்கத்திற்குச் செய்யப்பட்ட சேவையாகக் கருதப்படவேண்டும் என்பது

14. குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவை புரிவதாக உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ள எவரேனும் ஆளை நிறுவகமானது தொழிலுக்கமர்த்துமிடத்து, அந்த ஆளினால் நிறுவகத்துக்குப் புரியப்படும் ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்திற்கான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

15. (1) பேரவையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையில் அமைச்சரின் அமைச்சில் சேவையாற்றும் எவரேனும் அலுவலர், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினது ஒருப்பாட்டுடன் அனுமதிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் சம்மதத்துடனும், அந்த அலுவலரின் சம்மதத்துடனும், அதேபோன்ற சம்மதத்துடன் நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பேரவையின் வேண்டுகோளின்பேரில், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலரொருவர் தவிர்ந்த பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அந்த அலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பேரவையின் வேண்டுகோளின்பேரில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் அலுவலரொருவர் அல்லது சேவையாளரொருவர், அந்த அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும், அந்த உயர்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் பேரவையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

## பாகம் III

## நிதி

16. (1) நிறுவகத்தின் ஆரம்ப மூலதனமானது பாராளுமன்றத்தினது தீர்மானத்தின்மூலம் அந்த நோக்கத்திற்கென நிறுவகத்திற்கு வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளாதல் வேண்டும். — நிறுவகத்தின் ஆரம்ப மூலதனம்.

(2) நிறுவகத்தின் மூலதனமானது ஓர் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அல்லது பாராளுமன்றத்தின் ஏதேனும் தீர்மானத்தின் மூலம் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைகளினால் காலத்துக்குக் காலம் அதிகரிக்கப்படலாம்.

17. (1) நிறுவகமானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். — நிறுவகத்தின் நிதியம்.

(2) நிறுவகத்தின் நிதியத்திற்குள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டிற்கெனப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக் கொடைகள் என்றவகையாக நிறுவகத்தால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிறுவகத்தினால் அளிக்கப்பட்ட சேவைகளுக்காக இறுக்கப்பட்ட கட்டணங்களும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அத்தகைய நிதியத்தினுட் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) பின்வருவன அத்தகைய நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் அலுவல்களை நடாத்துவதில் அல்லது அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் நிறுவகத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

நிறுவகத்தின் நிதியாண்டு.

18. நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு.

19. அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வுசெய்தல் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### உயர்தரத் தொழினுட்ப நிறுவகங்களைத் தாபித்தல்

உயர்தரத் தொழினுட்ப நிறுவக மொன்றைத் தாபித்தல்.

20. (1) அமைச்சர், நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றின்மூலம்—

(அ) தொழினுட்ப ஆளணியினரதும் இணைந்த உயர் தொழில்புரியுநர்களினதும் கல்வியை ஏற்பாடுசெய்யும், மேம்படுத்தும் அத்துடன் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக, உயர்தரத் தொழினுட்ப நிறுவகமொன்றைத் தாபிக்கலாம்;

(ஆ) அத்தகைய நிறுவகத்துக்கு ஒரு பெயரையும் மகுடத்தையும் குறித்தொதுக்கலாம்;

(இ) அந்நிறுவகம் அமைந்திருக்கவேண்டிய அமைவிடத்தை அல்லது இடத்தைக் குறித்துரைக்கலாம்;

(ஈ) அத்தகைய நிறுவகத்துக்கு ஒரு பகுதியை அல்லது பகுதிகளைக் குறித்தொதுக்கலாம்; அத்துடன்

(உ) கற்கைப் பிரிவுகளைக் குறித்துரைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று ஆக்கப்படுவதன் மேல், ஓர் உயர்தாத் தொழினுட்ப நிறுவகம் அக்கட்டளையில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்மகுடத்துடன் தாபிக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டும்; அத்தகைய பெயரைக்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கவும் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படவும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஓர் உயர்தாத் தொழினுட்ப நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட, அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும பிரயோகிக்கவும், புரியவும், நிறைவேற்றவும் முழுத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

21. நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றுக்கமைய, ஓர் உயர்தாத் தொழினுட்ப நிறுவகம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :— உயர்தாத் தொழினுட்ப நிறுவகத்தின் தத்துவங்கள்.

(அ) நிறுவகத்தின் விதப்புரைகளின்மீது உயர்தாத் தொழினுட்ப நிறுவகத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல்;

(ஆ) நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடவிதானங்களுக்கு இசைந்தொழுக கற்கைநெறிகளை நடாத்துதல்;

(இ) அவசியமானவாறான எல்லாக் கருமங்களிலும் வேறு உயர்தாத் தொழினுட்ப நிறுவகங்களோடு இணைதல்;

(ஈ) கைத்தொழிலுடன் தொடர்புகளைப் பேணுதல்;

(உ) நிறுவகத்தின் அங்கீகாரத்தோடு விசாலிப்பு நெறிகளைத் திட்டமிடுதலும் செயற்படுத்தலும்;

(ஊ) கணக்குகளைப் பேணுதல்;

(எ) அதன் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும சம்பளங்களையும் வேறெவையேனும் செலவமிப்புக்களையும் கொடுத்தல்;

(ஏ) அதனால் நடாத்தப்பட்ட கற்கைநெறிகளில் திறமை எய்தியுள்ள ஆட்களை நிச்சயிப்பதற்காக நிறுவகத்தினால் குறித்துரைக்கப் பட்டவாறான பரீட்சைகளை நடாத்தலும் அத்தகைய பரீட்சைகளில் தேறியுள்ள தேர்வினர்களுக்கு டிப்புளோமாக்களையும் வேறு கல்விச் சிறப்புக்களையும் வழங்குமாறு நிறுவகத்துக்கு விதந்துரைத்தலும்;

(ஐ) நிறுவகத்தின் சம்மதத்தோடு ஆதனத்தைக் கொள்ளுதல்;

(ஒ) நிறுவகத்தின் ஒருப்பாட்டுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதல்;

(ஓ) நிறுவகத்தின் ஒழுங்குவிதிகளினாலும் துணைவிதிகளினாலும் காலத்துக்குக்காலம் விதந்துரைக்கப்படக்கூடியவாறான கட்டணங்களைக் கோருதலும் பெறுதலும்;

(ஔ) அதன் சொந்த வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரித்தலும், அதன் செயற்பாட்டுக்காக நிறுவகத்திடமிருந்து அங்கீகாரம் பெறுதலும்;

(க) அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல்; இதனுள் நிறுவகத்திலிருந்தான மானியக்கொடைகளும் அதனால் தோற்றுவிக்கப்பட்ட ஏதேனும் வருமானமும் வரவுவைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ங) நிறுவகத்தின் ஒருப்பாட்டுடன், நூல்களையும், ஆய்வுகூடங்களையும், வேலைக்களங்களையும், அலுவலகங்களையும், வேலையிடப் பரப்புகளையும், வகுப்பறைகளையும், பொழுதுபோக்கு இடப் பரப்புகளையும், ஏனைய கட்டடங்களையும் நிறுவுதலும் அவற்றுக்குச் சாதனமிடுதலும்.

உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்தின் அலுவலர்கள்.

22. உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்தின் அலுவலர்கள் பின்வருவோராதல் வேண்டும்:—

(அ) பிரதான நிறைவேற்று அலுவலராகவிருக்கவேண்டிய பணிப்பாளர்;

(ஆ) உயர்தரத் தொழினுட்ப நிறுவகத்தின் பொது நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருக்க வேண்டிய பதிவாளர்;

(இ) கணக்காளர்;

(ஈ) பிரதான நூலகப் பொறுப்பாளர்; அத்துடன்

(உ) பிரிவுத் தலைவர்கள்.

## பாகம் V

## பொது

1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் குறித்த சில ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாமை.

23. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 128 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், நிறுவகத்திற்கும் நிறுவகம் தொடர்பாகவும் ஏற்புடையனவாகாது.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நிறுவகமானது அட்டவணைப் படுத்தப்பட்டதொரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பது.

24. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட நிறுவகமானது அட்டவணைப்படுத்தப்பட்டதொரு நிறுவனமாகக் கருதப்படுதல்வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

நிறுவகத்தின் உறுப்பினர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்பட வேண்டும் என்பது.

25. நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் வழக்குக்கான பாதுகாப்பு.

26. (1) தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு ஏதுவும் —

(அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் நிறுவகத்திற்கு எதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது நிறுவகத்தின் பணிப்பின்மீது பேரவையின் உறுப்பினர் அல்லது நிறுவகத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரினாலும் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் செயல் எதற்காகவும் அவருக்கெதிராக,

அமைதல் ஆகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்தினால் உறப்படும் செலவெதுவும் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டும். அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது நிறுவகத்தால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத்தொகைகள் அந்நிதியத்துக்கு வரவுவைக்கப்பட வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பிடு செய்யப்படுகின்றவரான அத்தகைய எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது நிறுவகத்தின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய எவரேனும் ஆளினால் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) நிறுவகத்துக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கேனும் ஆளுக்கெதிரான அல்லது ஆதனத்துக்கெதிரான எழுத்தாணையேதுவும் நிறுவகத்தின் உறுப்பினரொருவருக்கெதிராக வழங்கப்படலாகாது.

ஒழுங்குவிதிகள்.

27. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சர், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்களுக்காகவும் அவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியாகக் கூடியளவு விரைவாக, அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும், அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி எதுவும் எந்தத் திகதியன்று அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் திகதி பற்றிய அறிவிப்பானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

28. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387' (வெளிநாட்டு) ரூபா 1,843' ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டு அலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் பாதை, கொழும்பு 01 என்னும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.